உ

சிவமயம்.

# குளகையொயிற்கும்மி.

இஃது

அகத்தியான்பள்ளி

**வயித்தியநாத சர்மாவினால்**

இயற்றப்பட்டு

நாகபட்டணம்

"எட்வர்ட் அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது.

1912.

O-,85 MVAI,K
N12
147066

உ

சிவமயம்.

# குளகை யொயிற் கும்மி.

### விநாயகர் துதி.

சீர்பெறும் பாரின்மிக்கேர்பெறு மானந்தப்
பேர்பெறுங் குளகைச் சீர் சொலவே
தேசன்பர மேசன்சக தீசன்பரை யீசன்றரு
நேசன்க ணேசன்ப தந்துணையே 1

### வாணி துதி.

அளகை நகர்நிகர் குளகை நகர்மாண்பைப்
புளகங்கொளப் புகன்றோதிடவே
ஆதன்மிக வேதன்றன காதன்மனை மாதின்சிறு
பாதத் தனில்விழுந் தேபகர்வோம் 2

### முருகன்றுதி.

திரையாழி சூழ்ந்தத் தரையோர் புகழ்கோடிக்
கரைமான்மி யத்தைக் கழன்றிடவே
சீலன்பரை பாலன்பகை காலன்றிருக் கோலன்வடி
வேலன் மலர்ப்பதங்கள் பணிவோம் 3

### ஈசன்றுதி.

தந்திரன் குளகைச் சந்திரன் கனக
சுந்தரன் மனதா னந்திக்கவே
தாரதலத் தோராருவி ணோராரு மங்கோராருயக்
காரார்வீ டுங்கொண்டவ ளருளே. 4

## அவையடக்கம்.

ஆதன்வ யித்திய நாதன்பு கன்றவிக்
காதன்மிக் காமொயிற் கொம்மியிலே
அரும்பிழை நேருங்கவி யோரும்புல வீரும் பொறுத்
தாரும் புகழவைத் தேயருள்வீர். 5

## நூல்.

நாடிக ளிற்புகழ் நாடுவ ளங்கொள்சோ
ணாடதற் கானன மாயிலகும்
நாதன்வதி வேதம்புக ழோதுஞ்சுர மோதன்னதி
னண்ணும் பொட்டேகுள கைநகரே. 6

அன்னக ரின்புக ழின்னபு விகொளும்
பன்னக முஞ்சொல்ல வொண்ணுதெனி
லடியேனுரை படிமீதினில் முடிவேகொடு கடிநாவல
ராகும வர்செவிக் கேறிடுமோ. 7

அத்தியலைவீசி முத்தைச் சிதறியோர்
பத்திபடுத்தும் பதியதுவே
யாடும்பர னீடும்புக ழோடுர்தகு காடும்புற
நாடும் பெரும்பதி யாமதுவே. 8

சங்கங் கழனிக ளெங்குங் கருவுயிர்த்
தங்கம் படுத்தும் பதியதுவே
தத்தைக்குயி லெத்திக்கிலு நத்திச்செவி தித்திக்கவே
கத்திப் பயில் பொழி லூரதுவே. 9

ஈசனமிர்தக டேசனமார்திடு
மேசின்வ ளங்கொ ணகரதுவே
ஈனங்கெட வேநன்மையை நானந்தனிலீனுங்கட
லானந்தங் கொண்டதுமந்நகரே. 10

ஆதியிலோரமன் றீதிலளக்கரைச்
சேதுகட்டியதா மவ்விடமே
யாரூர்திரி புராரூரு ளூரூர்குக னருணைடிடு
மந்தங்கொளும்பதியாமதுவே. 11

இந்தப் புகழ்கொளு மந்தப் பதியுமோர்
    சந்தப் படக்கொளு மாண்புகள் மற்
றெல்லாநம சொல்லாலுரை வெல்லாதெனி னல்லார் புகழ்
    சொல்லாயென் றுவல்சொலச்சிலதை. 12

புகன்றிடுவதை யுகந்து மேமன
    தகங்க ளித்ததினோர் குறைகள்
போகக்குண மாகச்சொலு மேகப்பொரு ளாகத்தனிற்
    போகும் பொருள்கள் கொள்வீர் புலவீர். 13

சுரர்களும் மற்ற சுரர்களுங்கடற்
    றாள்பட வேகடை காலந்தன்னில்
துற்றும்பல வற்றும்வர வெற்றுந்திரை மற்றுங்கடை
    யுற்றிடக் கண்டவ மிர்தத்தையே. 14

இச்சை படுந்தேவ ரெச்சில்படச் செய்த
    மிச்சத்தை வாயுவிடங்கொடுத்தே
எகிச்சத யாகத்தனூர் வேகத்தொடு போகிப்படர்
    மாகத்த னந்தப் புரம்வையென. 15

மாலுங்கொடுக்கவக் காலுங் கரங்கொடங்
    கேலுங்கடிபடைத் தேகிடுங்கால்
வனமாமறை வனமீதினி லனமாமிர்த கனவேனமு
    மண்ணில் விழுந்தே யுடைந்திடவும். 16

கண்டனில்ன்பயங் கொண்டவ னிற்கவே
    விண்டொழுகிய வமிர்தமதுங்
கங்காதரன் மங்காவடி வங்காறுற வங்கேசிவ
    லிங்காகிர்தியைக் கண்டுமச்சமே. 17

மிக்குடை யனுயிருக்கவ மரர்க
    ளக்கணத்தேகியவ் வாயுவையே
மேவிக்கடி கோவிக்கவ மாவிட்டுனு தாவிப்படர்
    விண்ணவரே வெப்பங் கொள்ளாதீர். 18

ஈசன்செயலிது வீசுங்காலாற்செய்த
மோசமல வென்றுரைத்திடவே
யெல்லாருமங் கெல்லார்மலை வில்லார்திரு வில்லாரிணை
மெல்லார் மலர்ப்பதம் போற்றி செய்தே. 19

அங்கணெழுந்தவவ் விங்கங்கொளும்பேர்வி
ளங்குமமிர்தகடேசனென
வன்போகிரை யின்பாயமைத் தென்பாபரணன் பாலுயி
ராகவுடல்கொடண்டர் செலப்பின். 20

அந்தவி லிங்கம்பொருந்துங் குளகரென்
றுந்தும்பெய ரதன் காரணம்யா
னறைவேனதி வின்ரவாயிவ னுறைவோரதை யறிவீர்மன
தாவலுடன்படப் புந்தியினில். 21

முன்னொரு காலத்து நன்னர்ம தாநதி
மன்னுங் கரையிற்சுவேதரெனும்
முனிவன்றன மனைதன்னொடு தனிநின்மல னினிதம்புய
மொட்டை நிகாடி பத்தி செய்தே. 22

வீற்றிருந்தபொழு தாற்றல் மிகுந்தவப்
பேற்றிலுதித்தார் குளகரப்போ
விரவுங்கடி பருவம்மிடி மருவும்படி தாவும்படர்
வேத முனிவர்கள் யாவருமே. 23

மிக்கவளங்கொளு நக்கன் மறைவனம்
புக்கவ்வீசனைப் பணிந்திருந்தார்
வேதங்கசு வேதன்றன காதன்மனை மாதும்பிற
வாதங்க மாமகவோடும் வந்தே. 24

நேசித்த கத்தியற் பூசித்தப் பாற்சென்று
தேசிற்றிகழமிர் தேசன்பதி
நேர்போயவ னோர்வீடது பேர்போகவு மேர்மேவ்வு
நேர்ந்ததில் வாழ்ந்தேயிருந்திடுங்கால். 25

அத்தனை மானச பத்தியினாற்பூசை
சித்தமு மந்தக்குளகர் செய்ய
வானாரொரு வுருவாயவ னொருநாளெதிர் வரவேயுட
னாவல்கொடேகுள கர்பணிந்தே. 26

நின்றிட வேயரு ளென்றனை வேண்டிய
வுன்றனுக் கேது விருப்பமென
நிமலன்றிரு விமலன்பெரு வமலன்பத கமலங்களை
நீடுதி செய்தே முனியுரைத்தார். 27

ஐயவெனதுபேர் வையம் புகழுவன்
மெய்யிற் றரிக்கவ ருளெனவே
ஐயன்சரி வையம்புக ழுய்யும்பெய ரையென்வடி
வெய்யத்த ரித்தே னெனப்புகல. 28

அன்றுமுதலாக வென்றுங் குளகரென்
கின்றபெயரும டைந்தனர்பின்
ஆதித்திருசேதுப்பெயர் மோதப்பெரு மேதுக்குரை
யோதப்படி யோர்செவிக்கொளுவீர். 29

ஓதுங்கி ரேதந்தி ரேதந்து வாபர
முங்கலி யென நான்குபடும்
யுகமோர்சதுர் யுகமாகுமவ் யுகமாயிர முக்காலுடை
யோற்கே யொருபக லாகிடுமே. 30

மற்றுஞ் சதுர்யுகத் துற்றிட வாயிர
முற்றிடு மந்தணற் கோரிரவே
மருவும்பக லிரவுஞ்செறி பொருவுந்தின மொருபுங்கவ
னொருதுங்க நாளது சேர்முப்பதே. 31

மாதமொன்றவ்வித மாதம் பதிற்றிரண்
டோதுமோ ராண்டந்த வாண்டிற்சதம்
வாயும்பொழு தோயுந்திரு மாயன்றன சேயின்வய
தாயுமப் போதரிக்கோர்தினமே. 32

குளகை யொயிற் கும்மி. 

147066
600 008.
0-185 MUA1,K
N12

அந்தக் கணக்கினி லுந்து மரிதன
தாயுள்ப ராபரற் கோர்தினமே
யறையிவ்வித மறியப்புகி லயனெவ்வள வரியெவ்வள
வாகுமதிற் காணிம்மால் ராமனாய். 33

மேலவ தாரத்திற் றேவீபட்டணக்கரை
தாவியே சேதுவைப் பந்தித்ததும்
மின்பொருவுமோர் மூன்றசாத மன்பெறுதரு வன்ரகுபதி
வேதவ னத்திற் பந்தஞ்செய்ததும். 34

ஆதலிதற்காதி சேதுவெனும்பெய
ரோதத்த ரித்ததின் மேவுமா
னருள்மைந்தனோர் முருகன்வதி தருவண்புக ழறைகின்றதை
யாவல்கொளக் கேட்டருள்புரிவீர். 35

தக்கன்றன் வேள்வியில் நக்கன்பு காமவி
ருக்கவ மரர்கள் சென்றமையால்
சாடுந்துய ரோடும்படி நீடும்புக ழோடுஞ்சிவ
சண்முக னாரவதாரஞ் செய்தார். 36

ஆறுமுகங்கொடு வீறர்சூரர்களைக்
கோறல்செய்தேபழ நித்தலஞ்சென்
றைராவத தெய்வயானையினையார்மண மெய்யார்வமொ
டையார் பரங்குன்றத்திற் புரிந்தார். 37

அப்போதொர் கானகத் தெப்போது மேவிவி
ருப்போடு நற்றவஞ் செய்திடுமோ
ரருமாமுனி யொருமானதி னுருநேரவு முருகாயவ
ணந்தவுடற் கொடதைப் புணர்ந்தார். 38

சேர்ந்திடவேகரு நேர்ந்திடவே நவ்வி
தேர்ந்தொரு வள்ளிக்குழியைக்கண்டே
சேரக்கரு வாரக்குழி யோரத்தினி னேரத்தன
பாரத்தைப் போட்டது நீங்கிடவே. 39

வள்ளிக்குழிதனு ளெள்ளிக்கதறியவ்
வொள்ளிக்கு மானுமொழி யிருக்க
வனவேடர்க ளனபொதினி லனமாமயி லினைசேருபு
வாரியெடுத்து மனைக்கொடுபோய். 40

செம்மை படவளர்த் தம்ம யாரும் வள்ளி
யம்மை யெனப் பெயருங் கொடுத்து
தினைமாவனத் தினையேபுரந் தனையாயிரு யெனவேடர்க
ளனையாளை வைத்துப்பிரிந்தனரே. 41

நீங்கியது மந்த மாங்குயிலாளுமங்
சோங்குந் கிளியை யாலேலாலமென்றே
நீட்டிக்கா மாட்டிப்பய மூட்டிக்கிளி யோட்டித்தினை
காட்டில் வளரவே காத்திடுங்கால். 42

நாரத ரன்னவ ளோரதை யேகண்டு
சீரது கொள்குசற்கே சொலவே
நணுகித்திருத் தணிகைக்கரு கணுகிச்சர வணனுக்குரை
நாரதன் சொல்ல வுடனெழுந்தே. 43

மான்பெற்ற மங்கையைத் தானுற்றிடப்பெருங்
கானுற்ற வடனைக் கண்டெயினர்
வடிவந்தனை யுடல்கொண்டவ ளிடமுந்தியொ ரடறுன்றிடு
வார்த்தைகள் மிக்கவே பேசலுற்றார். 44

ஆருந்தன் பேரென்ன வூரெங்கிருப்பது
யாருந்துணைகள் சமீபமில்லா
தரியும்மத கரியும்பல பரியுஞ்சிறு நரியுந்திரி
யாரணியத்தில் வசிப்பதென்னே. 45

முத்தை நிகர்த்தபல் மத்தக மா நடை
ரத்தினமே யுன்றன் வாய்திறந்து
மொழியாய்கணை விழியாயெனி லுழல்வேனுயு வழியாகிலு
மொழியா யெனிற் பழிநேருமுனை. 46

ஆதலா லோர்வழி யோதெனக் கேட்கிற
போதெயினக்குழு சோக்குக
ஞங்கேயொரு வேங்கையுட ருங்காவுற நீங்காவனர்
தீங்காமிதை யுரிப்போமெனவே. 47

ஓடுவரைத்தள்ளி வேடுவருக்கிறை
நாடிமகளை யீதேதெனவே
வோதீதுள தேதோதெரி யாதேயென மாதேயது
வுன்றனுக்கோர் துணையாகவென. 48

சொல்லியே வேடர்கள் செல்லவே வேலவ
ஞெல்லையில் முன்வடி வேற்றுவந்தே
சோலைக்குயில் போலப்பகர் வாளைச்சிறு லீலைகிது
வேலைதகுந்தகும் வாவெனவே. 49

எதுவரவாத் தீதுபடும் பல்த
காதவுரைகளைச் சாற்றுகிறாய்
இனியென்னெதிர் நனிநின்றிடி லெனதண்ணர்க ளுனைவந்துயி
ரேகத் துலைப்பார லேகிடுவாய். 50

என்றுமே வள்ளிபு கன்றிட வேயவ
ரொன்றிட வேலவன் றுனுமொரு
யென்பார்கிழ வன்போல்வடி வம்பாவுமு டம்பாயவ
ணேர்மாத வன்போற்கற் றாசுடுத்தும். 51

தளரு முடல்நாவு குளருந் தழுதழுத்
துளரு மொழிகாந் தடியுடைத்தும்
தட்டுத்தடி பட்டுப்படி குட்டிக்கா ணிட்டுப்பிற
கெட்டிப்பிடிக்கு நடையுடைத்தும். 52

வீக்ஷண்யபூதியுத் ராக்ஷந் தரித்தும்பஞ்
சாக்ஷரத் தைநாவ தோதிடவும்
வேதாசிவ போதாயொரு நாதாயரு டாதாவென
வேண்டுந் தவமுனிவர் போலும். 53

வேடந் தரித்தவ ணுடிட வேயந்த
வேடுவ ருங்கண்டு தான்பணிந்து
வெய்யிற்றவ மெய்யிற்பட நொய்யப்பத மெய்யத்துயர்
பையப்படர்ந்ததென் காரணமோ. 54

எங்க டவப்பயன் பங்கமி லாவுரு
வங்கங் கொடேயெதிர்ப் பட்டதுவோ
யேனோவிதி தானோவிது கானோவவு மானோவென
வீசனுமங்கவர்க் கோதலுற்றார், 55

ஐயா வெனக்குக்கை லாய மிருப்பிடம்
மெய்யார்வ மோடவண் விட்டெழுந்தே
ஆசிற்றிகழ் காசிப்பதி நேசித்துவிஸ் வாசத்தொடு
வாசத்திரைச் சங்கை யாடிப்பின்னும். 56

கோசலஞ் சீரரு ணாசலங் காழிவிர்த்
தாசலங் காளத்தி காஞ்சிதில்லை
கூரூர்,திரு வாரூரரு ளேரூர்முதற் பேரூர்பல
கோலிக் கண்டிகதிர் காமங்கண்டும். 57

ஆரியற் கன்யாகு மாரியைக் கண்டளுற்
றுடவே வந்தனன் யானதுபோ
தறிபுந்தித வறிகின்றிட பொறிதன்றிரு நெறிவிண்டிட
லாகியதாலிவ ணண்டினனே,. 58

என்றுபு கன்றிட நன்றிதை யாயிங்கு
துன்றுமெமதிளை யாடனக்கே
இணையாயொரு துணையாயவ ணணையாயென வணைவேனவ
ளெங்கிருப் பாளெனக் காட்டிடுவீர். 59

நீரென்று ரைக்கவக் கார்குழ லாளுக்கு
நேரவரை யழைத்தே கொடுபோய்
நின்னேர்துணை யின்றேருற மின்னேயிரு வென்னேசொலி
நீங்கினரே யந்த வேடரும். 60

வண்டார் குழலாளும் பண்டாரமேபரண்
கண்டேறுந் தின்னத் தினைதாரேன்
வாங்கிக்களை தூங்கப்பசி நீங்கப்புசித் தாங்கப்பா
ணேங்கத்துயில் கொளுமென்றுரைத்தாள். 61

அம்மொழிக்குக்கிழஞ் சம்மத மென்கவச்
செம்மொழி தேனிற்றினை பிசைந்து
அன்போடிதை யுண்பீரென வின்போடும ரன்பாலனு
மந்தத்தினை மாவை வாங்கியுண்டு. 62

அஞ்சுகமேயிது வஞ்சகமோ வென்றன்
நெஞ்சைப் பிடிக்குதே நஞ்சோவென
வடியாளும திடநேர்பசி விடவேமன துடனேதா
வாலமென்பது தகாதெனவேள். 63

தாகமெடுக்குதே மோகவலையாளே
வேகமாய் நீர்தருவாயெனவே
தனைநேர்கிழ வனையார்வமொ டனையாளுமோர் சுனைநேருபு
தாகந்தணித்திதிலேறு மென்றாள். 64

அன்னவ ரச்சுனை மன்னிவிழுந்தும் நீ
என்னடி குண்டி லெனைத்தள்ளினை
யடிபாதகி நொடியேறவே பிடியாயெனில் மடிவேனடி
பாதகமே யுனைப்பற்றுமடி. 65

தூக்கடி பார்வையை நோக்கடி யென்றுயர்
போக்கடி நீயென வன்னவளுந்
தொய்யத்தரு கையைக்கொடு செய்யக்கரை பையப்புகு
மையவெனக்கை பிடித்துவந்தார். 66

வந்ததும் பெண்ணேநீ எந்தனைச் சேர்ந்திங்கு
கந்திடுவாயென வந்தத்திரு
மாதும்பிற கோதுங்கிழ மேதுர்துயர் சாதுன்றிட
வந்துயான் செய்ததுதீ தெனவே. 67

எண்ணிப் பிச்சைக்கென நண்ணிய நீயொரு
பெண்ணை விரும்பினாற் கிட்டிடுமே
ஓடாமுழு மூடாவுரை யாடாதெதிர் போடாவென
வேகமானைவதவள் போயினளே. 68

அனனவள் போகவேள் முன்னவன் றன்னையே
யுன்னிடவே யவனானையென
வாகங்கொடு போகும்பெணி னேர்கண்டிட வேகன்செய
வன்னவ ளும்பயங் கொண்டுடனே. 69

ஐயாவே பண்டாரத் தையாவே யென்றனை
மெய்யார்வ மாக்காத் தருள்புரிவீர்
அடியேனும தடியேசா ணடிமையும தடிமையென
வாங்கே திரும்பிவேள் முன்வரவே. 70

என்னடி யானையை முன்னிற் கொணர்ந்தாயே
யென்மனமிக்க நடுங்குதடி
யெனவேயவ ளனபோதவர் முனநெருபு வுனதாவலி
னெண்ண முடிப்பனருளெனவே. 71

எண்ண முடிப்பது திண்ணமா னாலுண்மை
பண்ணிடு வாயெனக் கந்தன்சொல
வெண்மாகுண வன்மேலொரு வுண்மையிது வென்மேலரு
ளிங்கன்புரிவை யெனவேண்ட. 72

அப்பொழுதேவள்ளி கைப்பிடித்தார் கந்தர்
ஆனையுங் கானில் மறைந்ததுவே
அயில்வேலுடன் மயிலேறியே பயில்வோனுமோர் வெயில்வீசிடு
வாருமுகங்கொடு நின்றிடவே. 73

கண்டுமே சந்தோடங் கொண்டவளுஞ் சொல்வா
ளண்டுமென் குற்றம் பொறுத்தருள்வாய்
கந்தாவென வெந்தாயுட னந்தார்குழ லுந்தார்மண
மந்தாகாசத் தொடுசெய்தமுடன். 74

வந்தனரே யந்த முந்துங்குளகைவ
னந்தனிற்றங்கிக் கலந்திடவே
வகையீதுநங் குகனுருவ ருகையானதுந் தகவேயவர்
மகிழுஞ் சிறப்புகள் சொற்றிடுவோம். 75

சித்திரை மாதத்திற் சித்திரை நாளுட
னொத்திடு நற்பருவத்தினிலே
தேகம்மபி டேகம்மயில் வாகன்பட வேகண்டிடு
சீரெந்தன் நாவுரை சொல்லுதேவன், 76

தேசம்புகழவை காசியினில் வள்ளி
நேசன்பெறு முச்சவச் சிறப்பை
சிறியேனென தறிவாலுரை யுறுமோவெனி லறுமாமுக
சிற்பரனு ரருளாற் புகல்வன். 77

அந்தம தியில்ந டந்திடுங் கந்தற்கி
ரைந்துதினமு விழாச் சிறப்பாய்
ஆகந்தவி சாகஞ்செறி யோர்கந்தன மேகந்தின
மாகுமதி லவற்கே கமதாய். 78

காவடிகள் கொணர்ந் தேவடி வேலவன்
சேவடியிற் கபிடேகஞ் செய்வார்
கருணைக்குக னிருபொற்பத மருவப்பெரு பொருளிட்டுடன்
காணிக்கைகள் பலர் செய்திடுவார். 79

அன்றைக்கங்கு நடக்கின்ற பெருமையென்
னென்றுசொல்வன் யானோர் நாவதனு
லார்விஞ்சைக ணோர்கொண்டட னேர்கந்தனு மோர்குண்டினி
லாடிடயார்க்குந் தீர்த்தங்கொடுப்பார். 80

இப்படியானதின் பிற்பக லீசற்குச்
செப்பு மகாவபி டேகமென்றே
வாராளமா யாருகவே பாராபரன் சீராமுட
லெங்கும் குளிரவே செய்திடுவார். 81

அடங்குமோ தைலக் குடங்களினெண்ணை
திடங்களி லாம னிறைந்திடுமே
அளவேயில்லை யிளநீர்பெரு குளமாகிடு வளமார்நரை
யாவின்பா லென்கணக் குட்படுமோ. 82

கனிவர்க்கத்தின்ரச மினியென்ன சொல்வது
பனிநீரபிடேகம் பேர்கடலே
கார்சொரிவபோல் நீர்சொரிவர்க ளேர்பெரிகிடு மோரலங்க்ருதக்
காட்சியைக் காணவ நேகாயிரம். 83

நேத்திரங்கள்வேணுந் தோத்திரஞ்செய்யநா
மாத்திரஞ் சேடற்கும் போதாதெனில்
நோக்குக ளுருத்திடு சீரைச்சொலு வோரிப்புவி
யோரிற்றெரி கிலன்யானுமரோ. 84

எத்தியதீபம சாத்திய மாகும்நை
வேத்திய மோரபிடேகத்திற் கோன்
றிதமாகிய பதமோடுபல்விதமாயா னுதவாதிரு
வீராறு கண்ணற் கியற்றிடுவார். 85

பன்னியங்கள்பல மன்னியிருப்பது
மென்னியல்பா மளவுட்படுமோ
பாமன்றிர்விக் கிரமன்விதி பிரமன்முதல் சுரமன்னர்கள்
பாங்குடனே யுபதேசம்பெறும். 86

சந்நிதி யானல்யா னென்னசொல் வேனினி
மன்னுமல் வீசற்கு மிச்சிறப்பை
தகவேசெய்து மிகமேபட சுகமேகொளு மகவாவனைவன்
சாற்றெனக் கேட்கிலுரைத்திடுவன். 87

எங்கும் புகழ்மிகத் தங்குமய் யாத்துறைச்
சிங்கஞ்செய் நற்றவப் பேறதனு
லேர்மேவிய சீர்தாவிடு மோர்சேயொரு பேர்மேவிட
வெங்குங்கனக சுந்தரப்பெரும். 88

பெருந்தரித்திவ ணரும்புகழவிக்
காருந்துஞ் சோலேக்குளகை தனிற்
பிறந்தான்பவந் துறந்தானொரு வறந்தான்செயுந் திறந்தானுடற்
பெற்றுப் பிறங்குவா னன்னவனே. 89

இந்தச்சிறப்புகள் கந்தற்குச் செய்குவா
னந்தமட்டோவது வென்னிலின்னு
மிருவானியில் வருமாடவி லரிதாகிய வொருமாவபி
டேகமுஞ் செய்வா ரதன்பிறகே. 90

சேருமாடிச்சுக்ர வாரத்திலேயம்மை
யாருக்கலங்க்ருதஞ் செய்துவைப்பார்
நிலம்படு மாலங்கொளு காலன்றன காலன்கொள
நேர்சிம்ம மூலத்தாட்டுவர் மஞ்சனம். 91

கன்னித்திங்கடன்னில் மன்னுநவராத்ரி
தன்னிலங் கேர்பெற மீஸ்வரிக்கே
காணப்பல பூணிட்டுயர் மாணிப்புவி தோணப்பெரு
காட்சிகள் மிக்கவே செய்திடுவார். 92

எங்கும்புகழ்மிகத் தங்கிடவேதுலாத்
திங்களிற் சஷ்டிவிழா நடத்தி
யேர்பெற்றிடு சூர்முற்றிலு நேருற்றிட வோர்பெற்றிகொ
ளார்தெய்வயானை மணஞ்செய்குவார். 93

இன்னுமம்மதியில் மன்னுமவ்வீசற்கு
வன்னவபிடேகமுஞ் செய்குவார்
வர்விர்ச்சிக மார்திங்களி லோர்சங்குகொள் பேர்மஞ்சன
மின்பம்பொருந்திடச் செய்குவரே. 94

கார்த்திகையில்வருங் கார்த்திகை நாளிலே
சேர்த்திபெறத்தீப மேற்றிடுவார்
சருநிலமி டறுளோரவற் கொருமார்கழி திருவாதிரை
யருநாளின் மஞ்சன மாட்டுவிப்பார். 95

ஆசிற்றைத் திங்களோர் பூசத்திலுங்கூடு
மாசிமகத்து மீனத்துத்ரத்தும்
குரும்பபி டேகந்தனை யேகண்டிட வாகந்தனி
லாயிரங் கண்படைத் தாலேதகும். 96

[illegible]த்திரி தன்னிலத்
[illegible]சாமத்திலும்
பத்திப்பெரு கத்திப்பிய சுத்திப்படு முத்திக்கொரு
பாதைகாணப்பூசை செய்திடுவார். 97

இந்தப் புகழ்கொளு மந்தநல்லீசற்குக்
கந்தமலர்களு முண்டாக்கி
இனநந்தன வனமுந்தகு தினமும்பசு வினதின்சுவை
மீயப்பசு மடமுங் கட்டினார். 98

ஆடித்தை யாதத்திற் கோடிக்குப் போய்முழுக்
காடிவருபவர்க் கன்னமுத
லவர்வேண்டிடு மவையாவையு மவணேகளி யவரேகொள
வாசந்தமாக வளித்திடுவார். 99

இன்னமவர்செயு நன்னய முற்றுமிங்
கென்னொரு நாவாற்சொலப்புகுமோ
யெண்ணிக்கையி லெண்ணப்பட வொண்ணாதவர் நண்ணிச்செயு
மின்பத்தர்மமெனிற் சொல்வதெவன். 100

ஆயிரத்துத்தொள் ளாயிரத்துடனீ
ராறுசெப்டம்பர் தேதி யொன்பதிற்
காகும்பரி தாபிச்சிம்ம மாகுந்திங்க ளாறுநாலொடொன்
றாகுஞ்சோமன் வாரந்தன்னிலிதை. 101

அத்தியலேவீச கத்திநகர் வாழ்வ
யித்தியநாதனு மாவனுட
னன்பாயமைத் தென்பாபர ணன்பாலன தின்பேபெற
வவனியில் வைத்தவிப்பாடறனை. 102

பார்த்தோர்களும் வாழி கேட்டோர்களும் வாழி
பாங்குடனே படித்தோரும் வாழி
பாராயண நேராகச்செய் வோராருமற் றோராருமிப்
பாராருமே மிக வாழ்குகவே. 103

குளகை யொயிற் கும்மி முற்றிற்று.